# வேர்களின் குரல்

குழந்தைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான இதழ்

சித்திரை - திருவள்ளுவர் ஆண்டு 2040 (ஏப்ரல் - 2009) வேர் -1 குரல் - 2




# புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பு

# கண்டிக்கிறோம்



வாழும் உரிமை மறுக்கப்பட்டு
இலங்கையில் தமிழ் குழந்தைகள்
இனப்படுகொலை செய்யப்படுவதை
கண்டிக்கிறோம்...

இவண்,

**மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க மாநில கூட்டமைப்பு**

# வேர்களின் குரல்

குழந்தைகளின் உரிமைகளை
நிலைநாட்டுவதற்கான இதழ்

இதழாசிரியர் :
ச. சுபத்ரா
ஆசிரியர் குழு :
க. துரைராஜ்
ப. கார்த்திகேயன்
ம. முத்துலெட்சுமி
பொ. பிரியங்கா
இரா. கல்பனா
செ. சரவணன்
ர. சத்யா
ம. பாபு
செ. தியாகராஜன்
ஆ. ஜெயபால்
த. கவியரசன்
நிழற்படம் :
த.முனியேந்திரன்
வடிவமைப்பில் உதவி :
முனைவர். ஜாக்குலின் மேரி

வேர் 1

குரல் 2

சித்திரை
திருவள்ளுவர் ஆண்டு 2040
(ஏப்ரல் - 2009)



தொடர்புக்கு :
**வேர்களின் குரல்**
மேரி ஆனி சேரிட்டி ட்ரஸ்ட் (மேக்ட்)
கதவு எண்.8,
பிளாட் எண். 39,
ஸ்டார்லிங் அப்பார்ட்மெண்ட்,
அக்பராபாத் இரண்டாம் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 044 24721579


## ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த குழந்தைகளுக்கும், பெரியோர்களுக்கும், எங்கள் வளர்ச்சியில் தொடர்ந்து ஆதரவு தரும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் வணக்கம்.

இதற்கு முந்தைய காலாண்டு இதழில் உங்களிடம் பல கருத்துகளை பகிர்ந்து கொண்டதில் மகிழ்ச்சி என்றாலும், இலங்கை தமிழர்கள் தொடர்ச்சியாக இனப்படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள் என்பது வருத்தமாக உள்ளது.. பெண்களையும், குழந்தைளையும் கூட இலங்கை அரசு விட்டு வைக்கவில்லை. நாமும் ஒரு குழந்தை என்பதால் சிந்தித்து பாருங்கள். நாமெல்லாம் அம்மா, அப்பாவுடன் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு கேட்கிறதெல்லாம் வாங்கி தந்து பள்ளிக்கு அனுப்பும்போதே படிக்க முடியல. ஆனால் அந்த குழந்தைகள் அப்பா, அம்மாவை இழந்து எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று தெரியாம தவிக்கிறார்கள். இதெல்லாம் நினைத்து பார்க்கவே முடியல. எப்படிதான் அந்த குழந்தைகள் தாங்குறாங்கலோ தெரியல.

இந்த இதழில் எம் இயக்கங்களில் கிளைக்கூட்டம் நடைபெறும் முறை, வாசிப்பு திறன் வளர்ப்பு பயிற்சி பற்றிய ஒரு பார்வை. எம் இயக்கத்தின் மாநில கூட்டமைப்பு பற்றிய தெளிவு, புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பு பற்றியும், பொங்கல் விழா, கதை, கேள்வி பதில், விடுகதை ஆகியவைகளை வெளியிட்டுள்ளோம்.

இந்த இதழ் வெளிவரத் துணையாக இருந்து ஊக்கப்படுத்திய எங்கள் பணியாளர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எங்கள் ஆசிரியர் குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு அடுத்த காலாண்டு இதழில் உங்களை சந்திக்கும் வரை உங்களிடமிருந்து விடை பெறுவது....



**ச. சுபத்ரா,**
இதழாசிரியர்,
வயது 14, இராசாளிபட்டி,
மாவட்டத் தலைவர், புதுக்கோட்டை.

# இயக்க கூட்டம் நடைபெறும் முறைகள்

இந்த இதழில் இயக்கத்தின் கிளைக்கூட்டம் நடைபெறும் முறையை சற்று விரிவாகப் பார்ப்போம். கீழ்கண்ட நிகழ்ச்சிகள் அனைத்தையும் இணைச் செயலாளர் தொகுத்து வழங்குவார்.

**1. அறிக்கை ஏட்டில் உறுப்பினர்களின் கையொப்பம்**

இயக்கக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருக்கும் எல்லா உறுப்பினர்களும் இயக்க அறிக்கை ஏட்டில் கையொப்பமிடுவார்கள்.

**2. இயக்கப்பாடல்**

இயக்க உறுப்பினர்கள் எல்லோராலும் மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் பாடல் உணர்வுடன் பாடப்படும்.

**3. வரவேற்புரை**

கிளையின் தலைவர் அல்லது கிளையின் செயற்குழு உறுப்பினர் ஒருவரால் வரவேற்புரை வழங்கப்படும்.

**4. விவாதக் குறிப்பு**

கூட்ட நிகழ்வுகள் குறித்து பேசப்படும். அதாவது பேச வேண்டிய முக்கிய நிகழ்வு இருந்தால் அதையும் சேர்த்துக்கொண்டு அதற்குண்டான நேரத்தில் பேசப்படும்.

**5. சென்ற வார அறிக்கை**

கடந்த வார கூட்ட நிகழ்வுகள் மற்றும் இயக்கம் தொடர்புடைய அதன் அறிக்கை கிளையின் செயலாளரால் வாசிக்கப்படும். இந்த அறிக்கையில் ஏதேனும் திருத்தம் செய்ய வேண்டியிருந்தால் அதனையும் திருத்திய பிறகே தலைவர் கையொப்பமிடுவார்.

**6. சென்ற வார செயல் திட்டங்களின் மதிப்பீடு**

கடந்த ஒரு வாரம் முழுவதும் நடைபெற்ற செயல்பாடுகள் எல்லாம் செயல் திட்டத்தின் அடிப்படையில் நடந்துள்ளதா என விவாதிக்கப்படும்.

**7. பொருளாளர் அறிக்கை**

இயக்கத்தின் வரவு, செலவு மற்றும் நிதிநிலை அறிக்கை பொருளாளரால் வாசிக்கப்படும். செலவு செய்வதற்கு முன் செயற்குழுவின் அனுமதி பெறப்படும்.

**8. குழு விளையாட்டுகள்**

மண்சார்ந்த விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு குழுவில் உள்ள எல்லோரும் பங்கேற்குமாறு விளையாடப்படும்.

**9. கலந்துரையாடல்**

ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல் நடைபெறும். இது எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்ளும் நிகழ்வாக அமையும்.

**10. திட்டமிடல்**

நடப்பு வாரத்திற்கான செயல்பாடுகளை எப்படி செய்வது ? யார் யார் செய்வது? எப்போது செய்வது ? நிதியை எப்படி திரட்டுவது ? எவ்வளவு செலவு செய்வது ? போன்றவை திட்டமிடப்படும்.

**11. கலைப்பயிற்சி**

மண்ணின் கலைகள் தொடர்பான பயிற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**12. இன்றைய நிகழ்வுகள் குறித்த கண்ணோட்டம்**

கிளைச் செயலாளர் அன்றைய கூட்ட நிகழ்வுகள் முழுவதையும் வரிசையாக நினைவூட்டுவார்.

**13. நன்றியுரை**

துணைத்தலைவர் அனைவருக்கும் நன்றி கூறி கூட்டத்தை முடித்துவைப்பார்.

கூட்டம் நடத்தப்படும் இம்முறை மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க கூட்டமைப்பில் உள்ள அனைத்து கிளைகளுக்கும் பொருந்தும்.

ப. கார்த்திகேயன்
வயது 17, மாதம்பட்டி,
மாவட்டத் தலைவர், திருச்சிராப்பள்ளி.

## விடுகதை

1. இருட்டு வீட்டுகுள்ள முரட்டு ராசா? அவர் யார் ?
2. உரிச்ச முயல் சந்தைக்கு போகுது ? அது எது ?
3. குண்டன் குழியில் விழுந்தான், ஒல்லியன் தூக்குகிறான், அவன் யார்?
4. வாயில் இருந்து நூல் விடுவான் மந்திரவாதியும் அல்ல, வலை விரித்து காத்திருப்பான் வேடனும் அல்ல, அவன் யார் ?
5. சிவப்பாய் நிற்பான் தெருவில் நிற்பான், திறந்த வாயை மூட மாட்டான், அவன் யார் ?
6. காளை கட்டிக்கிடக்குது, கயிறு ஓடிக்கிடக்குது ? அது எது ?

விடை :

1. குருது, 2. புளியம்பழம், 3. குழிப்பணியாரம், 4. சிலந்தி, 5. அஞ்சல் பெட்டி, 6. பராங்கிக்காய்

கா.ராகவேந்திரன், வயது 12. இராசாளிப்பட்டி

# மேக்ட் நடத்தும் வாசிப்பு திறன் வளர்ப்பு பயிற்சி பற்றிய ஒரு பார்வை

வாசிப்பு திறன் வளர்ப்பு பயிற்சி என்பது தொடக்கப்பள்ளிகளில் படிக்கும் எல்லா கிராமப்புறக் குழந்தைகளுக்கும் தமிழ் எழுத்துக்களை அடையாளம் காண வைத்து அவற்றை வாசிக்க வைத்த பிறகு சொற்களை வாசிக்க வைத்து அதன்பின்பு வரிகளை வாசிக்க பழகிக் கொடுக்கும் பயிற்சியே வாசிப்புப் பயிற்சியாகும்.

2006ஆம் ஆண்டு முதல் முதலில் இராசாளிப்பட்டியில் தொடங்கப்பட்டது. தற்போது இராசாளிபட்டி, முத்தக்கவுண்டன்பட்டி, நம்மம்பட்டி, கவரப்பட்டி, விருதாப்பட்டி, பாட்னாபட்டி, செரளப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் இப்பயிற்சி நடைபெற்று வருகிறது.

கிராமப் பகுதிகளில் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த பெண்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு, பள்ளிகளுக்கு **புத்தக தேவதைகளாக** அனுப்பப் படுகின்றனர்.

இந்த **புத்தக தேவதைகளாக** பள்ளி ஆசிரியர்களின் பணிகளில் குறுக்கிடாமல், பள்ளி ஆசிரியர்களின் துணையோடு வாசிப்பு பயிற்சியினை அளிப்பார்கள். மேலும் இவர்கள் குழந்தைகளுக்குப் பிடித்த கற்றல் உபகரணங்களைக் கொண்டும், கதை அட்டைகள், ஆடல், பாடல்கள், விளையாட்டுகள் மூலமாக வாசிப்பு பயிற்சி அளிப்பதால் தொடர்ந்து இப்பயிற்சி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

ஒரு வகுப்பில் உள்ள குழந்தைகளை மூன்று பிரிவுகளில் தரம் பிரிக்கின்றனர்.

**1. முதல் நிலை மாணவர்கள் எழுத்துக்களை வாசிக்க வைத்தல்.**


**2. இரண்டாம் நிலை மாணவர்கள் வார்த்தைகளை வாசிக்க வைத்தல்.**

**3. மூன்றாம் நிலை சரளமாக வாசிக்க வைத்தல்.**

முதல் நிலைக்குக் கீழ் இருக்கும் குழந்தைகளை மூன்றாம் நிலைக்கு கொண்டு வருவதே புத்தக தேவதைகளின் கடமையாக இருக்கின்றது. உயர்நிலை கல்விக்கு செல்லும் போது இக்குழந்தைகள் தமிழ் மொழியை சிறப்பாக வாசிக்கின்றனர்.

**ஆ. குளோரி**
திட்ட ஒருங்கிணைப்பாளர்
மேக்ட்

# மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் மாநில கூட்டமைப்பு




கிளை அளவில் தேர்ந்தெடுக்கப்படும் ஏழு பேர் கொண்ட அமைப்பு கிளை செயற்குழு ஆகும். தலைவர், செயலாளர் இருவரில் ஒரு பெண்ணும், இணை- செயலாளர், துணைத் தலைவர் இருவரில் ஒரு பெண்ணும், பொருளாளர் மற்றும் இரு செயற்குழு உறுப்பினர்களில் ஒரு பெண்ணும் அவசியம் இடம் பெறுவார்கள்.

கிளையிலிருந்து தலைவர் மற்றும் செயலாளர் அல்லது செயற்குழுவிலிருந்து ஒரு பெண், ஒரு ஆண் என இருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் மாவட்ட பொதுக்குழுவில் இடம் பெறுவர்.

மாவட்டபொதுக் குழு மூலம் ஐந்து பேர் கொண்ட மாவட்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்படுவர். (ஒரு மண்டலத்திற்கு மேல் இருக்கும் மாவட்டகளில் ஒரு மண்டலத்திற்கு ஒரு ஆண் ஒரு பெண் என இரு கூடுதல் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள்).

மாவட்ட செயற்குழுவில் உள்ள செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரும் மாநில பொதுக் குழுவில் இடம் பெறுவர்.

மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மாநில செயற்குழுவைத்தேர்ந்தெடுப்பார்கள்.

**மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க மாநில தலைமைத்துவப் பயிற்சி முகாம்**

**இடம் : அரட்ஸ் பயிற்சி மையம், அரவணாம்பேட்டை , களூர்.**
**நாள் : 05.05.2009 முதல் 09.05.2009 வரை (ஐந்து நாட்கள்)**

**க.துரைராஜ்,** வயது 17, பாட்னாபட்டி, மாநில செயலாளர்,
பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு மற்றும் புதுவை.

# புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பு

புகையிலைப் பொருட்களை பயன்படுத்துவதால் குழந்தைகள் மற்றும் பெண்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே 'புகையிலை இல்லா உலகம் நோக்கி' எனும் முழக்கத்தோடு புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பில் மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கமும் இணைந்து செயல்படுகிறது.

இதன் காரணமாக பல போராட்டங்களையும் நடத்தியுள்ளது. அவற்றில் முக்கிய நிகழ்வுகள் ஒரு சிலவற்றையும் பார்ப்போம்.






கடந்த 09.12.2007 அன்று புகையிலை பொருட்கள் மீது எச்சரிக்கை படம் போட வேண்டும் என்று பெரிய அளவில் மனித சங்கிலி பேரணி நடத்தப்பட்டது. இதில் 128 குழந்தைகள் பங்கேற்றனர். மணப்பாறை பேருந்து நிலையம் மற்றும் விராலிமலையில் இப்பேரணி நடைபெற்றது. கடந்த 31.5.2008 உலக புகையிலை எதிர்ப்பு நாளன்று புகையிலை பொருட்களுக்கு எதிராகவும் எச்சரிக்கை படம் அச்சிடக் கோரியும் மேக்ட் வேர்கள்




குழந்தைகள் இயக்கம் சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. இவை சென்னையில் சில இடங்களிலும், திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்திலும், மணப்பாறை பேருந்து நிலையத்திலும் விராலிமலை பேருந்து நிலையத்திலும் நடைபெற்றது

கடந்த 02.10.2009 அன்று நடைமுறைக்கு வந்த ‘பொது இடங்களில் புகைபிடிக்கத் தடை’ என்ற சட்டம் தேவையா? தேவையற்றதா ? இது பற்றி தெரிந்துள்ளீர்களா? என மூன்று கேள்விகளை முன்வைத்து பொது மக்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்திலும், மணப்பாறை பேருந்து நிலையத்திலும், விராலிமலை பேருந்து நிலையத்திலும் நடத்தப்பட்ட இக்கருத்துகணிப்பில் மொத்தமாக 800 பேரிடம் கேள்வித்தாள்கள் கொடுக்கப்பட்டது. நடத்தப்பட்ட இக்கருத்துக்கணிப்பில் 747 பேர் இச்சட்டத்திற்கு ஆதரவாகவும், இச்சட்டம் தேவையற்றது என 28 பேரும், இச்சட்டம் பற்றி தெரியாது என 25 பேரும் தெரிவித்திருந்தனர்.




**இரா. கல்பனா**

வயது 17, கவரபட்டி

# சிறு குடும்பம் சீரான வாழ்வு

ஒரு காட்டில் இரண்டு முயல்கள் வாழ்ந்து வந்தன. ஒன்று வெள்ளையாகவும், மற்றொன்று சிவப்பாகவும் இருந்தது. சிவப்பு முயலுக்கு இரண்டு குட்டிகளும், வெள்ளை முயலுக்கு ஆறு குட்டிகளும் இருந்தன. இரண்டு முயல்களும் தனித்தனிப் புதர்களில் இருந்தாலும் உணவு தேட ஒன்றாகவே செல்லும். ஒரு நாள் ஆளுக்கு ஒரு முட்டைக்கோசு கிடைத்தது. அவற்றை புதர்களுக்கு கொண்டு வந்தன. சிவப்பு முயல் தன் இரண்டு குட்டிகளுடன் முட்டைக்கோசை தின்றது. மீதமான முட்டைக்கோசை வெளியே வீசியது. பக்கத்துப் புதரில் இருந்த வெள்ளை முயல் ஒரு முட்டைக்கோசைத் தன் ஆறு குட்டிகளுக்கும் சமமாகப் பங்கிட்டு கொடுத்தது. குட்டிகளுக்கு வயிறு நிறையவில்லை. ஒரு குட்டி **'அம்மா எனக்கு பசிக்கிறது இன்னும் வேண்டும்'** என்று கேட்டது. வெள்ளை முயலின் கண்கள் நீரால் நிரம்பின. வருத்தத்துடன் வெளியே வந்தது. சிவப்பு முயல் வீசியெறிந்த முட்டைக்கோசு துண்டு கண்ணில் படவே அதனை எடுத்துக் கொண்டு பசிக்கிறது என்று கூறிய குட்டியிடம் சென்றது.

ஆனால் ஆறு குட்டிகளுமே அந்த முட்டைக்கோசு துண்டு எனக்குத்தான் வேண்டும் என்று போட்டியிட்டு ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டன. அக்காட்சியைக் கண்ட வெள்ளை முயல் என்ன செய்வது என்று புரியாமல் மீண்டும் காட்டிற்கு உணவு தேடப் புறப்பட்டது. உணவு உட்கொண்ட சிவப்பு முயல் தன் இரண்டு குட்டிகளுடன் வசதியாக படுத்து உறங்கியது. வெள்ளை முயலின் ஆறு குட்டிகளும் படுக்க இடமின்றி ஒன்றின் மேல் ஒன்று படுத்துக்கொண்டன. சிவப்பு முயல் மகிழ்ச்சியாக இருப்பதும், தான் துன்பப்படுவதும் சிறு குடும்பமே சீரான வாழ்வு என்பதை அறியாததால்தான் என்று வெள்ளை முயல் வேதனை அடைந்தது. தன் வாழ்க்கை மற்றவர்களுக்கு நல்ல பாடமாக இருக்கட்டும் என்று விரும்பியது.

**ராஜா,** வயது 9, இராசாளிப்பட்டி.

## கேள்வி பதில்

1. உலக பத்திரிக்கை சுதந்திர நாள் ?

**விடை : மே 3**

2. இந்தியாவின் முதல் பெண்கள் இதழ் ?

**விடை : இந்தியன் லேடீஸ் (இது சென்னையில் வெளிவந்தது)**

3. விளம்பரங்களே இல்லாமல் பத்திரிக்கைகளை நடத்தியவர் யார் ?

**விடை : காந்தியடிகள்**

4. தமிழில் முதன் முதலில் தொடங்கப்பட்ட மாலை நாளிதழ் ?

**விடை : மாலை முரசு**

5. தமிழகத்தில் மாணவர்களால் தொடர்ந்து 16 ஆண்டுகளை தாண்டி நடத்தப்படும் ஒரே இதழ் எது ?

**விடை : இளந்தூது, மன்னம்பந்தல், ஏ.வி.சி., கல்லூரி மாணவர்களின் இதழ் இது.**

**பொ. பிரியங்கா,** வயது 12, காரடைக்கன்பட்டி.

# பொங்கல் விழா

மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கம் சார்பில் ஆண்டுதோறும் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் முத்தக்கவுண்டன்பட்டியில் பொங்கல் விழாவும்,

2006 ஆம் ஆண்டு இராசாளிப்பட்டியில் பொங்கல் விழாவும்,

2007 ஆம் ஆண்டு இராசாளிப்பட்டியில் குளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் கண்காட்சி மற்றும் பொங்கல் விழாவும்,







2008 ஆம் ஆண்டு இராசாளிப்பட்டியில் நடுவண் அமைச்சர் திரு. இரகுபதி தலைமையில் ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம் எனும் திட்டத்தின் தொடக்க விழா மற்றும் பொங்கல் விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த வரிசையில் கடந்த பொங்கல் விழா 11.01.2009 அன்று இராசாளிப்பட்டியில் கொண்டாடப்பட்டது.

திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இருந்து பல குழந்தைகள் பங்கேற்றனர். இயக்கப்பாடலுடன் தொடங்கிய விழாவில் குழுவிளையாட்டு விளையாடப்பட்டது. அதன் பிறகு பொங்கல் பொங்கப்பட்டது. அனைவரையும் வரவேற்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்ட மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் தலைவர் சுபத்ரா வரவேற்புரை வழங்கினார்.

மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கம் சார்பில் தயாரிக்கப்பட்ட **'வேர்களின் குரல்'** என்ற காலாண்டு இதழினை ஆசிரியர் குழு வெளியிட்டனர். இதழின் முதல் படியை இராசாளிப்பட்டி ஊராட்சி ஒன்றிய தலைவர் திரு. நடராஜன் அவர்கள் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அதில் குழந்தைகளின் வளர்ச்சியை வியப்புடன் பார்ப்பதாகக் கூறினார்.

விழாவில் அடுத்ததாக சமூகப்பணி மற்றும் ஆய்வு மையம் சார்பில் தயாரிக்கப்பட்ட கதை அட்டையை இராசாளிப்பட்டி ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி. முத்துலெட்சுமி காளமேகம் அவர்கள் வெளியிட்டார்.








முப்பது இயக்கங்களுக்கும் தலா ஒரு மரக்கன்று வழங்கப்பட்டது. மேலும் இவ்விழாவில் தமிழகம் மற்றும் புதுவை குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பின் மாநில செயலாளர் செல்வன். துரைராஜ், ஆஸ்மே சார்பில் திரு. ஆண்ரூ அவர்களும், ஜுலி அவர்களும், இராசாளிப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. ஜுலியட் அருள்ஜோதி அவர்களும், மேக்ட் அறக்கட்டளையின் அறங்காவலர்களில் ஒருவரான திரு. ஆரோக்கியசாமி அவர்களும், மேக்ட் இயக்குநர் திரு. சிரில் அலெக்சாண்டர் ஆகிய அனைவரும் வாழ்த்துரை வழங்கினார்கள். திருச்சி மாவட்ட மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத் தலைவர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

இறுதியாக சர்க்கரை பொங்கல், செங்கரும்பு, வேர்களின் குரல் (இதழ்) பகிர்ந்து கொள்ளப்பட்டதுடன், **விழா இனிதாக நிறைவுற்றது.**

**பிரியா**, வயது 14, இராசாளிப்பட்டி